

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 278

திங்கட்கிழமை
01 செப்ரெம்பர் 2025

ஆவணி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகின்றார் அநுரகுமார!

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 1

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துவைக்கவுள்ளார். ☞ 11

## குவியல் குவியலாக என்புச் சிதிலங்கள்!

யாழ்ப்பாணம், செப். 1

செம்மணிப் புதைகுழியில் இருந்து மூன்று வெவ்வேறு இடங்களில் குவியல் குவியல்களாக என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட என்புச் ☞ 11

செம்மணிப் புதைகுழியில்

## 12 என்புத்தொகுதிகள் நேற்றும் அடையாளம்

### ஒட்டுமொத்த எண்ணிக்கை 200 கடந்தது

யாழ்ப்பாணம், செப். 1

அரியாலை செம்மணிப் புதைகுழியில் இருந்து, நேற்று மேலும் 12 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரியாலை செம்மணிப் புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 39ஆவது நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, மேலும் 12 என்புத்தொகுதிகள் புதிதாக ☞ 11

இராணுவ முகாம்களில் உள்ள

## விகாரைகளுக்குக் கீழ் மனிதப் புதைகுழிகள்!

### ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, செப். 1

இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த பொதுமக்கள் மற்றும் போராளிகள் படுகொலைசெய்யப்பட்டு கேப்பாப்பிலவு மற்றும் வட்டுவாகல் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்களில் புதைக்கப்பட்டனர். அந்தப் புதைகுழி ☞ 11

## பெற்றோல் விலை 6 ரூபாவால் குறைப்பு!

விரிவு பக்கம்:- 11

செம்மணியில் வரிசையாக

## பல்வேறு வயதுடையோரின் என்புத்தொகுதிகள் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 1

அரியாலை-செம்மணிப்புதைகுழியின், ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் இருந்து பல்வேறு வயதுடையோரின் என்புத்தொகுதிகள் வரிசையாக மீட்கப்பட்டுள்ளன.

பெரியவர்கள், நடுத்தர வயதுடையவர்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோரின் என்புத்தொகுதிகளே மிக நெருக்கமாகத் தொடர்புற்றிருந்த நிலையில் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. அவர்கள் ஒருவருக்கு ஒருவர் தொடர்புடையவர்களாக இருக்கலாம் ☞ 11


## அடுத்த ஞாயிறன்று அரிய சந்திரகிரகணம்!

கொழும்பு, செப். 1

செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அரியவகை சந்திரகிரகணம் தென்படவுள்ளது என்று வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள ☞ 11

மயிலிட்டியில் நிறுத்தப்பட்டிருந்த

## இந்திய இழுவைப்படகுகளை அகற்றும் நடவடிக்கை தீவிரம்



யாழ்ப்பாணம், செப். 1

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு, மயிலிட்டித் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த படகுகளை துண்டுதுண்டாக உடைத்து அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மயிலிட்டித் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த 124 படகுகள் தொடர்பான ☞ 11

தானே அமைத்த

## மின்வேலியில் சிக்கி முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 1

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழைப் பகுதியில், பன்றிக்காக வைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்கி, குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குணரத்தினம் ☞ 11



இலஞ்சம்பெற முயன்றவேளை

## மதுவரி அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் கைது!

யாழ்ப்பாணம், செப். 1

இலஞ்சம் பெறுவதற்கு முயன்ற குற்றச்சாட்டில், சங்கானை-சித்தன்கேணி மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மூவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணச் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபாலவின் கீழ் இயங்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரி ☞ 11

## முச்சந்தி முரளி

'வேலியே பயிரை மேய்ஞ்சால் இப்பிடி கையும் களவுமா பிடிபடத்தானே வேணும்'

## ஜெனிவாவை எதிர்கொள்ள இலங்கை அரசு புதுவியூகம்

### சர்வதேச உயர்மட்ட அதிகாரிகளை சந்திக்கிறார் அமைச்சர் விஜித ஹேரத்



கொழும்பு, செப். 1

ஜெனிவாவை எதிர்கொள்வதற்கு முன்னர், கொழும்பில் பல முக்கியமான சந்திப்புகளில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஈடுபடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் ☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹறண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 31.08.2025 | திகதி 31.08.2025 | திகதி 31.08.2025 | திகதி 31.08.2025 | திகதி 31.08.2025 | திகதி 31.08.2025 | திகதி 31.08.2025 | திகதி 31.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4180 | சீட்டிழுப்பு இலக்கம் 1247 | சீட்டிழுப்பு இலக்கம் 0206 | சீட்டிழுப்பு இலக்கம் 2286 | சீட்டிழுப்பு இலக்கம் 5938 | சீட்டிழுப்பு இலக்கம் 1968 | சீட்டிழுப்பு இலக்கம் 0513 | சீட்டிழுப்பு இலக்கம் 0054 |
| ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கினம் மீனம் | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து H | ஆங்கில எழுத்து B | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கினம் மேஷம் |
| | | | சுப்பர் இலக்கம் 04 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 15 32 50 78 | வெற்றி இலக்கங்கள் 04 32 45 47 | வெற்றி இலக்கங்கள் 0 9 7 6 | வெற்றி இலக்கங்கள் 43 66 69 77 | வெற்றி இலக்கங்கள் 2 6 0 6 3 2 | வெற்றி இலக்கங்கள் 01 17 51 76 | வெற்றி இலக்கங்கள் 0 6 3 2 | வெற்றி இலக்கங்கள் 23 32 35 49 |
| விசேட எழுத்து C | | | | | விசேட எழுத்து N | | |

# குற்றவியல் கும்பல்களை கூண்டோடு ஒழிப்போம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



**கொழும்பு, செப். 1**

**நாடுமுழுவதும் ஊடுருவியுள்ள குற்றவியல் வலையமைப்புகளை தீர்க்கமாக அகற்றவேண்டிய நேரம் நெருங்கியுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தக் கும்பல்கள் பல ஆண்டுகளாகத் தங்கள் எல்லையை விரிவுபடுத்தியது மட்டுமல்லாமல், சில அரசியல் நபர்களின் மறைமுக ஒப்புதல் மற்றும் வெளிப்படையான ஆதரவு காரணமாகப் பெரும்பாலும் தண்டனையின்றிச் செயற்பட்டுவந்தனர். பெயர்களைக் குறிப்பிடாமல், கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் இத்தகைய குழுக்கள் செழிக்க அனுமதித்த அரசியல் ஆதரவின் கலாசாரத்தை நாம் ஒழிப்போம்.
இந்தச் சூழல்தான் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தின் ஆழமாக வேரூன்றிய அமைப்பை உருவாக்கியது, இது பாதிக்கப்படக்கூடிய சமூகங்களை வேட்டையாடி, முறையான நிர்வாகத்தைத் தடுக்கிறது.
இந்தப் புற்றுநோய் மேலும் பரவுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது. யாரும் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்பதை பொதுமக்களுக்கு உறுதியளிப்பதற்கும் இது ஒரு முக்கியமான தருணம் - என்றார். (ச-இ)



# வலுவான எதிரணிக்கு ரணில் அழைப்பு

கொழும்பு, செப். 1
வலுவானதொரு பொது எதிரணியைக் கட்டியெழுப்புவதற்குரிய அழைப்பை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கவுள்ளார்.
இதன் ஓர் அங்கமாக ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டுக்கு முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஏனைய கட்சித் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். எதிரணித் தலைவர்கள் பங்கேற்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்த வில் அல்லாமல் பொதுவானதொரு இடத்தில் மாநாட்டை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.
இதேவேளை ரணில் மற்றும் சஜித்துக்கிடையிலான அரசியல் உறவு 2020ஆம் ஆண்டு முறிந்தது. எனினும், ரணில் கைதுசெய்யப்பட்ட பின்னர் அவருக்காக சஜித் முன்னிலையானார். இதனையடுத்து இருவரும் தற்போது ஐக்கியமாகியுள்ளனர் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-44)

# ரூ.27 மில்லியன் பெறுமதியான போதைப்பொருளுடன் ஐவர் கைது

மன்னார், செப். 1
மன்னார், வான்கலை மற்றும் யாழ்ப்பாணம், நெடுந்தீவுக்கு அருகிலுள்ள கடற்பகுதியில் 27 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய போதைப்பொருளுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 27 மற்றும் 29ஆம் திகதிகளில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின்போதே இந்தக் கைது இடம்பெற்றது.
இதன்போது 121 கிலோகிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைதானவர்கள் 19 முதல் 56 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சந்தேகநபர்களை மேலதிக விசாரணைகளுக்காக நெடுந்தீவு மற்றும் வங்காலைப் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கோத்தா, சமனுக்கு சி.ஐ.டி. அழைப்பு!





கொழும்பு, செப். 1
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் முன்னாள் ஜனாதிபதிச் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் இரண்டு தனித்தனி முறைப்பாடுகள் தொடர்பாக வாக்குமூலம் அளிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இன்று திங்கட்கிழமை அழைக்கப்பட்டுள்ளனர்.
காலி முகத்திடலில் நடைபெற்ற போராட்டக்காரர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கட்டுப்படுத்தத் தவறியமை தொடர்பில் முன்னாள் பொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில், கோத்தாபய ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இங்கிலாந்துப் பயணம் தொடர்பாக அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்ட குற்றச்சாட்டில், வாக்குமூலம் அளிக்க சமன் ஏக்கநாயக்க அழைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 31.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0646 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 8 9 7 9 6 0 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 31.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2912 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 23 54 68 75 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 31.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 45 58 73 77 |
| வெற்றி வாரம் | 5073 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 31.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0760 |
| வெற்றி இலக்கம் | 26 37 46 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 31.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| கன்னி | |
| வெற்றி இலக்கம் | 04 08 27 54 |
| சீட்டிழுப்பு வாரம் | 4624 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 31.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கம் | 06 46 66 72 |
| வெற்றி வாரம் | 2088 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 31.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 16 39 59 73 |
| வெற்றி வாரம் | 2738 |

# சுற்றுலா விடுதிகளாகும் ஜனாதிபதி மாளிகைகள்

## முதலீட்டாளர்களுக்கு அழைப்பு

கொழும்பு, செப். 1
நுவரெலியா, அநுராதபுரம், மஹியங்கனை மற்றும் கதிர்காமம் போன்ற பகுதிகளில் உள்ள ஜனாதிபதி மாளிகைகளை சுற்றுலா விடுதிகளாகப் பயன்படுத்த முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.
தனியார் துறையைச் சேர்ந்த பங்குதாரர்களுடன் 2026 சுற்றுலாத்துறை குறித்த பட்ஜெட்டுக்கு முந்தைய கலந்துரையாடல் ஜனாதிபதி பணியகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
மேலும் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு வசதியான விடுமுறை விடுதிகளாக மேம்படுத்துவதில் முதலீடு செய்யுமாறும் வலியுறுத்தினார். இதுதொடர்பாக விரைவில் முறையான திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இவ்வாண்டில்
# 300 பொலிஸார் பணியிடை நீக்கம்



கொழும்பு, செப். 1

**சட்டவிரோதச் செயற்பாடுகளின் காரணமாக 300 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்வாண்டில் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்க்கட்சிகள் அரசசேவையை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச வேண்டாம். அரச சேவைக்கு பொருத்தமற்ற சிலர் இருக்கலாம். பொலிஸில் கூட அவ்வாறானவர்கள் இருக்கக் கூடும். அண்மையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் செய்த சட்டவிரோதச் செயற்பாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்தும் சேவையில் நீடிக்கமுடியாது. தவறிழைப்பவர்களை எக்காரணத்துக்காகவும் அரசசேவையில் வைத்திருக்கப்போவதில்லை. அதேபோன்று ஏனைய துறைகளிலும் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அந்தந்த நிறுவனங்களின் பிரதானிகளுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

# 4 வாள்களுடன் நால்வர் கைது!

கிளிநொச்சி, செப். 1

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குப்பட்ட கோணாவில் பகுதியில் 4 வாள்கள் மற்றும் போதைப்பொருள்களுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய நான்கு சந்தேகநபர்களை மறித்துப் பொலிஸார் சோதனையிட்டபோது அவர்கள் உடைமையில் மறைத்துவைத்திருந்த 4 வாள்கள் மற்றும் 7 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்களை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)

# போராட்டத்தில் குதிக்கவுள்ள அரச வங்கிச் சேவையாளர்

கொழும்பு, செப். 1

அரச வங்கிச் சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கங்கள் அடுத்த வாரம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளன.

வருடாந்த போனஸ் கொடுப்பனவு உள்ளிட்டவற்றுக்கு நியாயமற்ற முறையில் வரையறைகள் விடுக்கப்பட்டுள்ளமை மற்றும் அவற்றுக்கு அதிக வரி அறவிடப்படுகின்றமை உள்ளிட்ட பிரச்சினைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. பல தசாப்தங்களாக தாம் பெற்று வந்த உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுவதாகவும், சலுகைகள் நீக்கப்படுவதாகவும் குறித்த தொழிற்சங்கங்கள் குற்றஞ்சுமத்தியுள்ளன. (ச-இ)

# சுகாதாரச் சீர்கேடு ரூ.20,000 தண்டம்

யாழ்ப்பாணம், செப். 1

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் சுகாதார விதிமுறைகளைப் பேணாது இயங்கிய உணவகத்துக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையின்போது கழிவு நீரை வெளிச்சூழலுக்கு அப்புறப்படுத்தியமை, உணவகத்தில் கழிவு கள் திரள அனுமதித்தமை மற்றும் மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் உணவைக் கையாண்டமை என்பவை கண்டறியப்பட்டன. அதனையடுத்து உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டநிலையில் குறித்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்டபோது தண்டம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ச)



# நிர்வாக சேவை தரம் ஒன்றுக்கு வடக்கில் ஐவர் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், செப்.1

வடக்கின் கல்வி அதிகாரிகள் ஐவர் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றுக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். 31.07.2025 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைவாக இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. என்.கந்ததாசன், எஸ்.தர்மசீலன், திருமதி கே.பிரதீபா, சி. தேவகுமாரன், ஆர்.ஜே. அன்ரொனி ஆகியோரோ இவர்கள் கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றுக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (ச-20)

## எதுக்கு தேவையில்லாத வேலை?

வட்ஸப்பை ஆட்டிப்படைக்கிற பேயொண்டு வடக்கில உலாவுதெண்டு முந்தநாள் பட்சி சொன்னதெல்லோ. அப்பிடி வட்ஸப்பை 'ஹக்' பண்ணினால் பிறகு அம்போதான், கடைசிமட்டும் அதை மீட்க ஏலாதெண்டும் பட்சி சொல்லியிருந்தது. ஆனால் மாண்டுபோட்டுதெண்டு நினைச்ச தங்கட வட்ஸப் எக்கவுண்டுகளை கனபேர் கஷ்டப்பட்டு மீட்டிருக்கினமாம். அப்பிடி என்ன விஷமுறி மருந்து குடுத்து வட்ஸப்பை மீட்டவை எண்டு சொல்லுறது, உங்களுக்கும் பிரியோசனப்படும்.

வெளிநாடுகளில இருந்து வட்ஸப் கோல் பண்ணிப்போட்டு, "ஒரு அவசர மீட்டிங் சூமில இருக்கு. அதுக்கான 'ஓ.ரி.பி' நம்பர் வரும் அதையொருக்கா அனுப்புங்கோ" எண்டு பொறிவைச்சுத்தான் வட்ஸப்பை ஹக் செய்யிறவை. அவையின்ர பொறிக்குள்ள அகப்பட்டு, 'ஓ.ரி.பி' நம்பரை அனுப்பினாலோ இல்லாட்டி வட்ஸப்புக்கு வாற லிங்கை அமத்தினாலோ 'அரோகரா' தான். அப்பிடியே தங்கட கட்டுப்பாட்டுக்குள்ள உங்கட வட்ஸப்பை எங்கேயோ இருக்கிற கண்ணுக்குத்தெரியாத கும்பல் கொண்டுவந்திடும். வட்ஸப்பில ரண்டு அடுக்குப் பாதுகாப்பு இருந்தால் இப்பிடி 'ஹக்' பண்ணமுடியாது. உங்கட போன் நம்பருக்கு மட்டுமில்லாமல், ஈமெயிலுக்கும் 'செக்கியூரிட்டி கோட்' குடுத்து வைச்சிருந்தால், ஒருத்தரும் உங்கட வட்ஸப்பை இப்போதைக்குத் தொடமுடியாது. அதையும் மீறி ஏதும் அவை 'ஹக்' செய்தாலும், உங்கட ஈமெயிலுக்குள்ளால போய் உடனேயே அதை மீட்டுக்கொண்டந்திடலாம். இப்பிடி ரண்டு அடுக்குப் பாதுகாப்பு இல்லாதவையின்ர வட்ஸப்பைத்தான் வடக்கில வளைச்சு வளைச்சு 'ஹக்' பண்ணுகினம். அநேகமா டாக்குத்தர்மார் இப்பிடி ரண்டு அடுக்குப் பாதுகாப்பெல்லாம் போடுற அளவுக்கு வட்ஸப்பில மினக்கெடுறேலை, அதாலதான் அவையின்ர வட்ஸப்புகளை ஈஸியா மடக்கியிருக்கினம்.

இப்பிடி ரண்டு அடுக்குப் பாதுகாப்பு இல்லாமல் தங்கட வட்ஸப்பைப் பறிகுடுத்த டாக்குத்தர்மார் சிலர் அதை மீட்டிருக்கினம். இவையின்ர வட்ஸப்பை ஹக் பண்ணினவை செய்யிற முதல்வேலை, அந்த வட்ஸப்பின் 'ஓ.ரி.பி' நம்பர் போன் நம்பருக்குப் போகாமல், தங்கட ஈமெயிலுக்கு வாற மாதிரி செட்டிங்கை மாத்துறதுதான். அப்பிடிச் செய்தால் என்னதான் முக்கினாலும், வட்ஸப்பை வைச்சிருந்தவையின்ர போன் நம்பருக்கு 'ஓ.ரி.பி' நம்பர் வராது. ஹக் பண்ணினவையின்ர ஈமெயிலுக்குத்தான் போகும். எண்டாலும் தன் முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன் மாதிரி நீங்கள் திரும்பத் திரும்பப் போனுக்கு 'ஓ.ரி.பி' நம்பரரை அனுப்பச் சொல்லிக் கேட்டால், "பத்துமணித்தியாலத்துக்குப் பிறகுதான் செட்டிங்கை மாத்தலாம்" எண்டு வட்ஸப்காரர் சொல்லுவினம். நீங்களும் கண்கொத்திப் பாம்புமாதிரி எப்ப பத்துமணித்தியாலம் ஆகும் எண்டு வெயிட் பண்ணி, அந்த நேரம் வந்தவுடன திரும்பச் செட்டிங்கை மாத்தினால் உடன உங்களுக்கு 'ஓ.ரி.பி' நம்பர் வந்திடும். அப்பிடியே போய் உங்கட போன் நம்பருக்கும், ஈமெயிலுக்கும் இனிமேல் 'ஓ.ரி.பி' நம்பர் வாறமாதிரி ரண்டு அடுக்குப் பாதுகாப்பையும் செற் பண்ணினால் பிறகு பயமில்லாமல் வட்ஸப்பை நீங்கள் பாவிக்கலாம். இப்பிடியெல்லாம் கஷ்டப்படுறதைவிட, தேவையில்லாமல் வேற ஆருக்கும் 'ஓ.ரி.பி' நம்பர் அனுப்பாமல் விட்டாலே நீங்கள் நிம்மதியா இருக்கலாம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு நண்பர்களிடம் எதிர்பார்த்த பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடியாக முடியும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதரவகையில் சுபச்செலவுகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** உறவினர்கள் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கக்கூடும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார். . எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாள். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதி கரிக்கும்.

**தனுசு:** தந்தைவழி உறவுகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். நண்பர்களிடம் காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும்.

**மகரம்:** சிலருக்கு தாய்வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. மாலையில் நண்பர்கள் மூலம் கேட்கும் செய்தி உங்களை உற்சாகப்படுத்தும்.

**கும்பம்:** சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.




# சர்வதேசத்தில் ஒலிக்கும் குரல்களே நீதிக்கான பயணத்தைப் பலப்படுத்தும்!

## பிரிட்டனின் நிகழ்ந்த பேரெழுச்சி ஏனைய தேசங்களிலும் நிகழுமா?

**ஆதிரன்**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, இலங்கையிலும் உலக நாடுகள் சிலவற்றிலும் நேற்றுப் பேரணிகளும் போராட்டங்களும் இடம்பெற்றிருக்கின்றன. இறுதிப்போரின்போதும், அதற்கு முன்னதாகவும் இடம்பெற்ற இனப்படுகொலைகள், மனிதப் புதைகுழிகள் மற்றும் காணாமல் ஆக்கப்படல்கள் ஆகியவற்றுக்கு நீதி கோரியும், சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தியுமே தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற போராட்டங்கள் அமைந்திருந்தன. உலக நாடுகள் பலவற்றில் ஈழத் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் சாராம்சமும் அதுதான். குறிப்பாக லண்டனிலுள்ள ஸ்ரீலங்கா உயர்ஸ்தானிகரகத்துக்கு முன்னால் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டமும் தொடர்ந்து பிரித்தானிய பிரதமர் பணிமனை வரைக்குமான நடைபயணமும் கடந்த காலங்களை விடவும் பேரெழுச்சியுடன் நடை பெற்றுள்ளன.

நீடித்த உள்நாட்டுப்போர் முள்ளிவாய்க்காலில் முற்றுப் பெற்று 16 ஆண்டுகள் முற்றாகக் கடந்துவிட்டன. எனினும் இன்றுவரை விசாரணைக்கான பொறிமுறை எவ்வாறு அமையும் என்பது தொடர்பில்கூட எந்தத் தீர்மானமும் எடுக்கப்பட்டதாயில்லை. சர்வதேசப் பொறிமுறை என்று ஈழத்தமிழர் தரப்பும், சர்வதேச மேற்பார்வையுடனான உள்ளகப் பொறிமுறை என்று சில சர்வதேசத் தரப்புகளும், உள்ளகப் பொறிமுறை என்று ஸ்ரீலங்கா அரசா கமும் மாறிமாறி கூறுகின்றனவே தவிர, 'விசாரணை' ற கட்டத்துக்குள் இந்த விடயம் இன்னமும் நகர்ந்தபாடில்லை. இதற்கு, 'ஈழத் தமிழர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி' சர்வதேச வெளியில் இடம்பெறும் போராட்டங்களின் போதாமையும் பிரதான காரணம் என்றால், அதை மறுப்பதற்கில்லை.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கும், போர்க் குற்றங்களுக்கும் சர்வதேச விசாரணைகள்தான் தேவை என்று ஈழத்தமிழர்கள் அழுத்தமாக வலியுறுத்தி வருகின்றனர். எனவே, இதற்கான பொறிமுறைகள் சர்வதேச மயப்பட்டு வகுக்கப்பட்டு, இலங்கைக்கு வெளியில் இருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவேண்டும். ஈழம் தொடர்பான விடயத்தில், சர்வதேச நாடுகளில் இடம்பெறும் போராட்டங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு சர்வதேசப் பொறிமுறையை வலியுறுத்துகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு இந்தக் கோரிக்கை வலுப்பெறவும், செயலுருப் பெறவும் காரணமாக அமையும். வெறுமனே தமிழர் தாயகத்தில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் மட்டும் ஒருபோதும் சர்வதேசத்தின் கண்களைத் திறக்கப்போவதோ அல்லது திருப்திப்படுத் தப் போவதோ இல்லை. ஆதலால்தான், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், தமிழர்கள் திருப்திப்படும் அல்லது ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளகப் பொறிமுறை வலுப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றாரே தவிர, இலங்கைவிட யத்தில் 'சர்வதேசப் பொறிமுறையே ஒற்றைத் தெரிவு' என்று இதுவரை கூறவில்லை. எனவே, சர்வதேச மயப்பட்ட போராட்டங்கள் மூலம் இந்த வெற்றிடங்களை நாங்கள் இறுக்கமாக நிரப்பிக்கொள்ள வேண்டும். அதுவே, தீர்வைத் தேடும் பாதை லப்படுத்தும்.




# 'வன்மம்' நூல் அறிமுகம் செம்மணியில்

யாழ்ப்பாணம், செப். 1

தமிழர் வாழ்வுரிமை மையத்தின் ஏற்பாட்டில் கிருஷாந்தி கொலை வழக்கு விசாரணைத் தொகுப்பு நூலான வன்மம் நூல் அறிமுக நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் யாழ் செம்மணிச் சந்தியில் அரசியல், சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அருட்பணி வசந்தன், பொன்னுத்துரை ஐங்கரநேசன், நாகமுத்து இன்பநாயகம், கத்யான அமரசிங்க, தரிந்து உடுவரகெதர, நடராஜா ஜனகன், யூட் டினேஷ், ரனித்தா ஞானராஜா, வீரசிங்கம், உதயசீலன் கற்கண்டு, நடராஜர் காண்டீபன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகள் ஆற்றவுள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

எதிர்க்கவேண்டிய இடத்தில்
மௌனமாக இருப்பது
பெரும் பாவமாகும்.

ஆபிரஹாம் லிங்கன்


# வேண்டாம் விஷப்பரீட்சை!

இலங்கைக்குள் இனி ஆய்வுக்கப்பல்கள் அனுமதிக்கப்படும். நாட்டுக்குக் கிடைக்கும் நன்மைகளின் அடிப்படையில், கப்பல்களை அனுமதிப்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார் துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சரான பிமல் ரத்நாயக்க. முன்னாள் ஜனாதிபதி ரணில் அரசாங்கத்தின் காலத்தில், இலங்கைக்குள் சர்வதேச ஆய்வுக் கப்பல்களை அனுமதிப்பதில்லை என்று எடுக்கப்பட்ட முடிவு மிகச்சாதாரணமாக எடுக்கப்படவில்லை. சீனக் கப்பலொன்றை இலங்கை அனுமதிக்க முயன்றதால், பிராந்தியத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய 'மறைமுகப் பதற்றங்களைத்' தொடர்ந்து, 'அணிசேரா கொள்கையின்' அடிப்படையிலேயே அந்த முடிவு எடுக்கப்பட்டது. எனவே, ஸ்ரீலங்காவின் வெளிவிவகாரக் கொள்கைகள் மாற்றப்பட்டுவருகின்றனவா என்ற சந்தேகத்தை தற்போதைய அரசாங்கத்தின் முடிவுகள் வலுவாக ஏற்படுத்தியுள்ளன.

இலங்கையின் கடற்பரப்புக்குள் நுழைந்து ஆய்வுகளில் ஈடுபடுவது சீனாவின் மிகப்பெரிய கனவுத் திட்டம். இலங்கையின் கடல்சார் தட்பவெப்ப நிலைமைகளும், இந்தியாவின் கடல்சார் தட்பவெப்ப நிலைகளும் கிட்டத்தட்ட ஒரேமாதிரியானவை. ஆதலால், இலங்கையின் கடற்பரப்பை நுணுக்கமாக ஆராய்வதன்மூலம், இந்தியக்கடற்பரப்புகள் தொடர்பான புரிதலை - தெளிவை ஏற்படுத்த முடியும் என்பது சீனாவின் நம்பிக்கை. ஆதலால்தான், இலங்கையின் கடற்பரப்புக்குள் இதுவரை சர்வதேச ஆய்வுக் கப்பல்கள் எவையும் அனுமதிக்கப்படாத பட்சத்திலும், இலங்கையின் கடற்பரப்புக்கு அருகாக உள்ள சர்வதேசக் கடற்பரப்பில் அடிக்கொரு தடவை சீனக்கப்பல்கள் வந்துசெல்கின்றன. நிலைமை இவ்வாறிருக்கையில், இலங்கைக்குள் ஆய்வுக் கப்பல்களை அனுமதிப்பது என்ற அநுர அரசாங்கத்தின் முடிவு ஆபத்தானது என்பதுடன், இலங்கை - இந்திய உறவில் விரிசல்களையும் ஏற்படுத்தவல்லது.

இலங்கையின் கடற்பரப்புக்குள் சீனக் கப்பல்களும் வரலாம், இந்தியக் கப்பல்களும் வரலாம் என்பதுதான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாடு. அனைத்துக் கப்பல்களையும் அனுமதித்தால், அது பாரபட்சம் இன்றிய நடவடிக்கை என்பதே அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கருத்துகளில் இருந்து தொனிக்கும் அர்த்தப்பாடு. ஆனால், யதார்த்தம் என்னவென்றால், அநுர அரசாங்கத்தின் முடிவு சீனாவுக்குச் சார்பானதே. ஏனென்றால், இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய ஆய்வுக் கப்பல்கள் வருவதால், சீனாவுக்கு ஆபத்தில்லை. ஆனால், சீன ஆய்வுக் கப்பல்கள் வருவதால் இந்தியாவுக்கு ஆபத்துள்ளது. ஆதலால், ஆய்வுக் கப்பல்களை அனுமதிக்கும் முடிவில் இலங்கையின் நலன்கள் கவனத்திற்கொள்ளப்படுவதைப் போன்று இந்தியாவின் நலன்களும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். இன்னும் வெளிப்படையாகச் சொல்வதானால், இலங்கையின் கடற்பரப்பு விவகாரத்தில் பிராந்தியத்தின் நலன் என்பது இந்தியாவின் நலன்களே.

சீனா தனது கடற்படையை சர்வதேச அளவில் அசுரத்தனமாகக் கட்டமைத்து வருகின்றது. இதற்கு, சீன ஆய்வுக் கப்பல்கள் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றன. போதாததற்கு, இந்திய வரலாற்றில் இதுவரை முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்தியாவும் கடற்படையைப் பலப்படுத்த ஆரம்பித்துள்ளது. இவ்வாறான நிலையில், ஆய்வுக் கப்பல்களை இலங்கைக்குள் அனுமதிக்கும் பட்சத்தில், அதைவிட விஷப் பரீட்சையென்று எதுவும் இருக்கப்போவதில்லை.




## வேலைநிறுத்தத்தால் தேங்கிய ஒன்றரைக்கோடி தபாற்பொதிகள்



கொழும்பு, செப். 1

**தபாற்தொழிற்சங்கங்கள் கடந்த 17ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்திரு ந்த போராட்டம் கைவிடப்பட்டு ஒரு வாரம் நிறைவடைந்துள்ளநிலையிலும் இன்னும் சுமார் ஒன்றரைக் கோடி தபாற்பொதிகள் நாடளாவிய ரீதியில் தேங்கியுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.**


ஒன்றிணைந்த தபாற்தொழிற்சங்க முன்னணியின் இணை ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவிக்கையில்,

போராட்டத்தின் எதிரொலியாக தபால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளதன்மூலம் சகல தபாலகங்களிலும் சுமார் 5 நாள்களுக்கான தபாற்பொதிகள் குவிந்துள்ளன. இவ்வாறு நாடளாவிய ரீதியில் சுமார் ஒன்றரைக் கோடி தபாற்பொதிகள் தேங்கியுள்ளன. இந்தப் பொதிகளுக்குள் தரம் ஒன்றுக்குள் மாணவர்களை உள்வாங்குவதற்கான கடிதங்கள், உயர்தரப் பரீட்சைகளுக்கான கடிதங்கள், நேர்காணல்களுக்கான கடிதங்கள், வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள் என பல முக்கியமான ஆவணங்கள் உள்ளன. பொது மக்களுக்கான முக்கியமான கடிதங்களை இவ்வாறு தேக்கிவைத்திருப்பதற்கு தபால்மா அதிபருக்கு எந்த உரிமையும் இல்லை. இந்த நெருக்கடிக்கு அவரே முற்றுமுழுதாகப் பொறுப்புக் கூறவேண்டும். இந்த நிலைமை தொடர்ந்தால் தபால் துறை முற்றாக வீழ்ச்சியடையும்- என்றார். (ச-இ)

## வீட்டு உணவு கேட்கும் ராஜித

கொழும்பு, செப். 1

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன வீட்டு உணவுகளைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார் என்று சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதே வேளை, ராஜித சேனாரத்னவைப் பரிசோதித்த சிறைச்சாலை மருத்துவமனையில் அவரை மருத்துவர்கள் அனுமதிக்கும் அளவுக்கு நோய்ப் பாதிப்பு எதுவும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர் என்றும் சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## பஸ் விபத்தில் ஒருவர் பலி!

### 57 பேர் காயம்

அம்பாறை, பொத்துவில், கோமாரிப் பகுதியில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 57 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த பஸ் விபத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. அறுகம்பை நோக்கி சுற்றுலா சென்ற பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகி யுள்ளது. பஸ்ஸானது பாலத்தில் மோதி கவிழ்ந்ததில் இந்த விபத்து சம்பவித்ததாகவும் விபத்து தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## அறுகம்குடாவில் இஸ்ரேலியர்கள் கைது

அறுகம்குடாவில் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இரண்டு இஸ்ரேலிய பிரஜைகள் கடந்த வெள்ளிக்கிழமை பொத்துவில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அறுகம்குடாவில் ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் மற்றும் அவரின் மனைவிமீது இந்த இருவரும் தாக்குதல் நடத்தினரென அவர்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)


## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொலை!

வென்னப்புவப் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் வந்த குழுவொன்று மோட்டார் சைக்கிள்மீது மோதியதுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரையும் கூர்மையான ஆயுதங்களால் தாக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தங்கரதத்தில் நெல்லியூர் துர்க்கை

யாழ்ப்பாணம், செப்.1

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப் பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய விசுவா வசு வருடப் பெருவிழாவின் ஐந்தாம் நாள் திருவிழாவான தங்கரத உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.

வசந்தமண்டபப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து துர்க்கை அம்பாள் உள்வீதி யில் உலாவந்து ஆலய முன்றலில் ஆரோகணித்து மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தங்கரதத்தில் அடிய வர்கள் புடைசூழ எழிலுறப் பவனி வந் தார். (ச-41-66)

# திண்மக்கழிவுகளைத் தரம்பிரித்து வழங்காதுவிடின் சட்டநடவடிக்கை

## பருத்தித்துறை நகரசபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 1

**பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் திண்மக்கழிவுகளைத் தரம்பிரித்து வழங்காத வர்த்தகர்கள்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனப் பருத்தித்துறை நகரபிதா வின்சன் டீ போல் டக்ளஸ் போலினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

பருத்தித்துறை நகரபிதாவினால் வர்த்த கர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையினால் வழ மையான திண்மக்கழிவு சேவைக்கு மேலதிகமாக இன்று தொடக்கம் தினம் தோறும் மாலை 6 மணிக்கு பிறிதொரு சேவையும் நடைபெறவுள்ளது. ஆகவே வியாபார நிலையங்களில் சேகரிக்கப்ப டும் திண்ம கழிவுகளைத் தரம் பிரித்து வியாபார நிலையங்களுக்கு முன்பாக வைத்து இந்தச் சேவைக்கு பூரண ஒத்து ழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு தரம்பிரித்து வைக்கப்படாத பட்சத்தில் முதல் தடவையாக ஐயாயிரம் ரூபாவும், இரண்டாவது தடவையாக பத் தாயிரம் ரூபாவும் தண்டப்பணமாக அறவிடப்படும் எனவும் மூன்றாவது தடவையாகவும் அவ்வாறு செயற்பட் டால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் பட்டு சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்தக் கடிதத்தில் அறிவுறுத் தப்பட்டுள்ளது.

இதேவேளை, வர்த்தகர்களினால் மாலை அல்லது முன்னிரவு வேளை யில் வியாபார நிலையத்துக்கு முன்பாக வைக்கப்படும் திண்மக்கழிவுப் பொதி கள் மறுநாள் காலையில் சேகரிக்கப்ப டுவதற்கு இடைப்பட்ட நேரத்தில் விலங் கு கள், பறவைகளினால் சிதைவுக் குள்ளா கப்படுகின்றமையால் பிறி தொரு சேவையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)



கொக்கிளாய் அருள்மிகு கண்ணகை அம் மன் ஆலய திருக்குட நன்னீராட்டுப் பெரு விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற் றது. இதன்போது ஆலய மலர் மற்றும் இறுவட்டு என்பவற்றின் வெளியீடுகள் நடைபெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் நா.வேதநா யகன் கலந்துகொண்டார். (ச-25,19)

# இ.போ.ச. பணியாளர்கள் போராட்டம் நிறைவு




யாழ்ப்பாணம், செப்.1

இலங்கை போக்குவரத்துச் சபைத் தொழிற்சங்கங் கள் நாடுதழுவியதாக முன்னெடுத்துவந்த பணிப்பு றக்கணிப்பு போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்சங் கங்கள் கடந்த புதன்கிழமை நள்ளிரவு முதல் நாடுத முவிய பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன் னெடுத்து வந்தது.

பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக அரச பேருந்து சேவையினைப் பயன்படுத்தும் பயணிகள் கடந்த இரண்டு நாள்களிலும் அந்தரிக்கும் நிலை ஏற்பட்டது. குறிப்பாக தனியார் பேருந்துகள் சேவை யில் ஈடுபடாத வழித்தடங்களில் பயணிக்கும் பயணி கள் பயணத்தை மேற்கொள்ளமுடியாது பெரிதும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-100)




# ‘முல்கோ’ விற்பனை நிலையம் முல்லைத்தீவில் திறந்துவைப்பு

முல்லைத்தீவு, செப்.1

முல்லைத்தீவு கரைதுறைபற்றுக் கால்நடை வளர்ப்போர் கூட் டுறவுச் சங்கத்தின் ‘முல்கோ’ விற்பனை நிலையம் கடந்த வெள் ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் இதனைத் திறந்துவைத்தனர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், க.திலகநாதன், து.ரவிகரன் உள்ளிட்டோருடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலர், மேலதிக மாவட்டச் செயலர், கரைதுறைப் பற்று பிரதேச செயலர், மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையா ளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-25,19)



# வட்டு. துணவி சிவனுக்கு மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப்.1

வட்டுக்கோட்டை துணவியில் 400 வருடங்கள் பழமைவாய்ந்த துணவி ஆதிசிவன் ஆலய மஹா கும்பாபிஷேகம் அடியவர்கள் புடைசூழ கடந்த வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-25,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலைக்கு நீதிகோரி கல்வியங்காட்டில் கையெழுத்து

வடக்கு - கிழக்கு மனிதப்புதைகுழிகள் மற்றும் இனப்படுகொலைக்கு நீதிகோரி கையெழுத்துப் பெறும் நடவடிக்கை நேற்று யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுச் சந்தை முன்பாக முன்னெடுக்கப்பட்டது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையில் இந்த நடவடிக்கை இடம்பெற்றது. இதன்போது முன்னாள் மாகாணசபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு பொதுமக்களிடம் கையெழுத்துகளைப் பெற்றனர். செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைகளுக்கும் நீதியைக் கோருவதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன்றமை குறிப்பிடத்தக்கது.

(சு-20)



## கேள்வி அறிவித்தல்
### வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி

**வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளை ஒரே கொடுப்பனவு (Key Money) அடிப்படையில் வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.**

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | கடை விபரம் | மாத வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (Keymoney) |
|---|---|---|---|---|---|
| 1 | கனகராயன்குளம் கடைத்தொகுதி கடை இல A | 6,500.00 | 3,000.00 | 10,000.00 | 1,560,000.00 |
| 2 | கனகராயன்குளம் கடைத்தொகுதி கடை இல B | 6,500.00 | 3,000.00 | 10,000.00 | 1,560,000.00 |
| 3 | கனகராயன்குளம் கடைத்தொகுதி கடை இல C | 6,500.00 | 3,000.00 | 10,000.00 | 1,560,000.00 |
| 4 | நெடுங்கேணி பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல A1 | 1,750.00 | 3,000.00 | 10,000.00 | 420,000.00 |
| 5 | நெடுங்கேணி பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல A3 | 1,750.00 | 3,000.00 | 10,000.00 | 420,000.00 |
| 6 | நெடுங்கேணி பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல A6 | 1,750.00 | 3,000.00 | 10,000.00 | 420,000.00 |
| 7 | நெடுங்கேணி பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல A7 | 1,750.00 | 3,000.00 | 10,000.00 | 420,000.00 |
| 8 | நெடுங்கேணி பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல B0 | 1,500.00 | 3,000.00 | 10,000.00 | 360,000.00 |
| 9 | நெடுங்கேணி பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல B1 | 1,500.00 | 3,000.00 | 10,000.00 | 360,000.00 |
| 10 | நெடுங்கேணி பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல B3 | 3,500.00 | 3,000.00 | 10,000.00 | 840,000.00 |
| 11 | நெடுங்கேணி பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல B6 | 3,500.00 | 3,000.00 | 10,000.00 | 840,000.00 |
| 12 | நெடுங்கேணி பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல C9 | 1,750.00 | 3,000.00 | 10,000.00 | 420,000.00 |
| 13 | புளியங்குளம் சந்தைக் கடை இல IV (புதிய கடை) | 7,500.00 | 3,000.00 | 10,000.00 | 1,800,000.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 2025.09.01 - 2025.09.19 பிற்பகல் 1.30 வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 2025.09.19 பிற்பகல் 02.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரம் 2025.09.19 பிற்பகல் 02.05 மணி

**கேள்வி நிபந்தனைகள்**

1. கேள்விதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதம், தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப் பிரதி, கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் அல்லது வதிவிடத்தினை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஒரு ஆவணம் என்பனவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதி என்பனவற்றை தனித்தனி உறைகளில் இட்டு "தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 2025.09.19 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைகக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் கேள்விப்பெட்டியினுள் இடமுடியும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் தவறுநராக அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. சித்திபெறும் கேள்விதாரர் தங்களது கேள்வித்தொகையினை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
6. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேசசபைக்கு செலுத்தப்பட்ட கேள்வித் தொகை (கீமணி) எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.
7. இவ் வியாபாரநிலையங்களுக்கான மாதாந்த வாடகை மேலே அட்டவணையில் உள்ளவாறு செலுத்துதல் வேண்டும். எனினும் காலத்திற்குகாலம் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்டவாறு வாடகைத் தொகை மாற்றி அமைக்கப்படும்.
8. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
9. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
10. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
11. கடைகளை பெற்றுக்கொள்வோர் பொது சுகாதார நடைமுறைகளினை பின்பற்றுவதுடன் கடை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
12. குறித்த கடைகளில் வாகன திருத்தகம், இரும்பு ஒட்டு தொழிலகம், வெடி மருந்து உற்பத்திகள் விற்பனை, நாவிதன் கடை, சலவைத்தொழில் போன்ற கடைகள் நடாத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2030200, மற்றும் 0242053014 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தி.கிருஸ்ணவேணி,**
**தவிசாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை.**
**29.08.2025**

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 . 08 . 1934



இறப்பு 01 . 09 . 2013

**அமரர் கைலாயபிள்ளை சிவலிங்கம்**

அன்பாய் அரவணைத்து
அறிவுரைகள் பல கூறி விகடமாய் பேசி
எமையெல்லாம் மகிழ்வித்து விட்டு
எங்கு சென்றீர்கள் ஐயா.......
ஓர் ஆண்டு என்ன ஆண்டுகள் பல
சென்றாலும் என்றும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது

கதிரிப்பாய்,
அச்சுவேலி.

என்றும் நினைவுகளுடன்
பிள்ளைகள்.

(CS/56039) J-1

## விசேட அறிவித்தல்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பும் (02.09.2025) செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் (07.10.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நடைபெறும்.

செவ்வாய்க்கிழமை (07.10.2025) அன்றைய தினம் யாழ் மாவட்ட எல்லைக்குள் அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களும் முழுமையாக மூடப்பட்டு அனைவரும் தவறாமல் கூட்டத்தில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மேற்குறித்த நிகழ்வுகள் அனைத்தும் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் நடைபெறும்**

இரத்ததான நிகழ்வு எதிர்வரும் (05.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் நடைபெறும். மேற்குறித்த அனைத்து நிகழ்வுகளுக்கும் எங்கள் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**நிர்வாகம்**
**யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணுக்காய் பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், துணுக்காய்

## கிளைக்குழுத் தெரிவு தொடர்பான வாக்காளர் பட்டியல்கள் காட்சிப்படுத்தல் தொடர்பான அறிவித்தல்

எமது சங்கத்தில் 30.06.2025வரை வாக்களிக்க தகுதியுள்ள வாக்காளர் பட்டியல்கள் இயங்கும் கிளை நிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும் 01.09.2025ல் இருந்து 15.09.2025வரை காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது

| இல | கிளையின் பெயர் | வாக்காளர் பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ள இடம் |
|---|---|---|
| 1 | துணுக்காய் | துணுக்காய் கிளை நிலையம் |
| 2 | கல்விளான் | கல்விளான் கிளை நிலையம் |
| 3 | யோகபுரம் மேற்கு | தலைமை அலுவலகம், துணுக்காய் |
| 4 | யோகபுரம் 2.4 | ஸ்ரீமுருகன் கிளை நிலையம் |
| 5 | யோகபுரம் 1.5 | தலைமை அலுவலகம், துணுக்காய் |
| 6 | புத்துவெட்டுவான் | புத்துவெட்டுவான் கிளை நிலையம் |
| 7 | தென்னியன்குளம் | தென்னியன்குளம் கிளை நிலையம் |
| 8 | யோகபுரம் 1.9 | தலைமை அலுவலகம், துணுக்காய் |
| 9 | கோட்டைகட்டியகுளம் | கோட்டைகட்டியகுளம் கிளை நிலையம் |
| 10 | பழையமுறிகண்டி | ஐயன்கன்குளம் கிளை நிலையம் |
| 11 | அமைதிபுரம் | தலைமை அலுவலகம், துணுக்காய் |
| 12 | ஸ்ரீமுருகன் | ஸ்ரீமுருகன் கிளை நிலையம் |
| 13 | அனிஞ்சியன்குளம் | மினி கோப்சிற்றி, மல்லாவி. |
| 14 | தேறாங்கண்டல் | தலைமை அலுவலகம், துணுக்காய் |
| 15 | ஐயன்கன்குளம் | ஐயன்கன்குளம் கிளை நிலையம் |
| 16 | அம்பலப்பெருமாள்குளம் | கோட்டைகட்டியகுளம் கிளை நிலையம் |
| 17 | ஆரோக்கியபுரம் | தலைமை அலுவலகம், துணுக்காய் |

இப்பட்டியலில் உள்ள பெயர் விபரங்கள், முகவரிகள் தொடர்பான ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் 15.09.2025ந்திகதிக்கு முன் செயலாளர், துணுக்காய் பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், துணுக்காய். எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு :- ஏதேனும் ஆட்சேபனைகள் கிடைக்கப்பெறாதவிடத்து காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலின் அடிப்படையில் கிளைக்குழுத் தெரிவுகள் நடாத்தப்படும்.

**தலைவர்** **செயலாளர்**

(CR 59288) E

## தமிழ் சைகைமொழிபெயர்ப்பாளர்களுக்கான பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

**ஒழுங்கமைப்பு:** தமிழ் செவிப்புல வலுவற்றோர் அமைப்பு (TDA)

செவிப்புல வலுவற்றோர் சமூகத்தில் ஏனையோருடன் தொடர்பாடுதலில் எதிர்கொள்ளும் சவால்களை குறைப்பதிலும், அவர்களை வலுவூட்டுதலிலும் நீங்கள் ஆர்வமுள்ளவராக இருக்கிறீர்களா? அவ்வாறாயின், எமது நிறுவனத்தினால் நடாத்தப்படவுள்ள தமிழ் சைகை மொழிபெயர்ப்பாளர்களுக்கான பயிற்சிநெறியில் இணைந்து, சான்று பெற்ற சைகை மொழிபெயர்ப்பாளராகி, செவிப்புல வலுவற்ற சமூகத்தினருக்கு சேவையாற்றிடுங்கள்.

**பயிற்சி உள்ளடக்கம்:**

- தமிழ் சைகை மொழியில் விரிவான பயிற்சி
- நெறிமுறைகள், செவிப்புல வலுவற்றோர் கலாச்சாரம் மற்றும் உள்ளடக்கிய தகவல்தொடர்பு பற்றிய பாடத் தொகுப்புக்கள்
- அனுபவம் வாய்ந்த செவிப்புல வலுவற்ற பயிற்சியாளர்கள் மற்றும் தொழில் சார்ந்த சைகை மொழிபெயர்ப்பாளர்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் அமர்வுகள்
- நடைமுறை சார்ந்த ஒப்படைகள், பயிற்சி பட்டறைகள் மற்றும் நிகழ்நிலை மொழிபெயர்ப்பு பயிற்சி
- வெற்றிகரமாக பயிற்சியினை நிறைவு செய்பவர்களுக்கான பயிற்சி சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்பு

**யார் விண்ணப்பிக்க முடியும்?**

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், ஆங்கிலம், தமிழ் உட்பட குறைந்தது 6 பாடங்களில் தேர்ச்சி.
- தமிழில் சரளமாக உரையாட கூடிய ஆற்றல்
- வயதெல்லை: 18 - 35
- செவிப்புல வலுவற்ற சமூகத்தின் நலனில் ஆர்வமுள்ள ஆசிரியர்கள், சமூக பணியாளர்கள், இளைஞர், யுவதிகள்,
- சைகை மொழியில் முன் அனுபவம் தேவையில்லை
- அடிப்படையிலிருந்து பயிற்சி அளிக்கப்படும்.

**பயிற்சி காலம்** : 120 மணித்தியாலங்கள் (முழு நேரம் / பகுதி நேரம்)

**பயிற்சி கட்டணம் :** ரூபா 18,000

**இடம்:** தமிழ் செவிப்புல வலுவற்றோர் அமைப்பு அலுவலகம், 421 A, பருத்தித்துறை வீதி, நல்லூர் (நல்லூர் சிவன் கோவில் முன்பாக)

**நேர்காணல் மற்றும் பயிற்சியாளர் தெரிவு:** 2025.09.05 காலை 09.00 மணிக்கும் மாலை 04.00 மணிக்குமிடையில் (சுயவிபரக் கோவை மற்றும் கல்வி சான்றிதழ்களின் மூல ஆவணங்களுடன் சமூகமளிக்கவும்).

**பணிப்பாளர்**
**தமிழ் செவிப்புல வலுவற்றோர் அமைப்பு அலுவலகம்,**
421 A, பருத்தித்துறை வீதி, நல்லூர்
தொலைபேசி: 021-2210426, 076-6972748

(CS/59252) J-1

Best Wishes

# சேவைநலன் பாராட்டு



Congratulations

யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயத்தில்

03.01.2017 - 31.08.2025 வரை சிறப்பாக சேவையாற்றி

இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் (SLEAS) சித்தியடைந்து உதவிக்கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெறும்

## திரு நாகேஸ்வரன் பிரியந்தன்

அவர்களின் எதிர்காலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்
பழைய மாணவர் சங்கம்
யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமரர் அமிர்தலிங்கத்தின் ஜனன தின நிகழ்வுகள்!



யாழ்ப்பாணம், செப். 1

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த முதலாவது தமிழரான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 98ஆவது பிறந்த நாள் நிகழ்வு யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் நினைவுப்பேருரையையும், மறவன்புலவு சச்சிதானந்தன் சிறப்புரையையும் நிகழ்த்தினார்கள்.

நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான எம். கே. சிவாஜிலிங்கம், கா. விக்னேஸ்வரன், யாழ். மாநகர முதல்வர் திருமதி. மதிவதனி விவேகானந்தராஜா , முன்னாள் யாழ். மாநகரசபை முதல்வர் செ. கந்தையன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன், பிரதேச சபை முன்னாள் தவிசாளர் திருமதி. நாகரஞ்சினி ஐங்கரன், சட்டத்தரணி கனக. மனோகரன்(கனடா), வலி. கிழக்கு பிரதேசசபை தவிசாளர் நிரோஷா, மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர். (ச)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## குமாரசாமி செல்வராணி

(திதி: 01.09.2025)



தோற்றம் 26.08.1956

மறைவு 12.09.2024

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளி விளக்கே
உள்ளவர் சுற்றமும்
கூடிக் கழித்த உறவுகளை
கைவிட்டு சென்றதேனோ
பிரிவால் வாடி நிற்கின்ற
உள்ளங்கள் தேற்ற
- மொழியின்றி
தவிக்கின்றதே ஓராண்டு
ஆண்டாய் நின் உறவின்
அடி தேடி துடிக்கின்றதே.

மயிலு வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

பாசமிகு
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(CS/59297) J-1

# அரசியற்தீர்வு விடயத்தில் அக்கறைகாட்ட வேண்டும்!

## ஜனாதிபதி அநுரகுமாரவிடம் சிவில் செயற்பாட்டாளர்கள் வலியுறுத்து



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், வடக்கு, கிழக்கில் அபிவிருத்திக்கு வழங்கும் முக்கியத்து வத்தை அரசியற்தீர்வுவிடயத்தில்முன்வைக்கவேண்டும் என்று தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்று எதிர்வரும் 23ஆம் திகதியுடன் ஒரு வருடமாகின்றது. இதனைமுன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பெருமளவு அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. இது நல்லவிடயமாக இருந்தபோதிலும், அபிவிருத்திக்குச் சமாந்தரமாக அரசியல் உரிமைகள் தொடர்பிலும்கவனம்செலுத்தப்படவேண்டும்.

மைத்திரி - ரணில் கூட்டாட்சி அரசாங்கத்தில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்குரிய வரைவு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, இறுதிப்படுத்தப்பட்டு வாக்கெடுப்புடன் நிறைவேற்றப்படும் என தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது. எனினும், அதற்குரிய பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. மாறாக, பொருளாதாரத்தைப் பலப்படுத்திய பின்னரே அரசியலமைப்புப் பணிகள் இடம்பெறும் என்று கூறப்படுகின்றது. இந்தக் கருத்துக்களை ஏற்க முடியாது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை அரசாங்கம் முதல் இருவருட ஆட்சிக்குள் செய்துவிட வேண்டும். அவ்வாறு இல்லையேல் அதற்குரிய சாத்தியப்பாடுகள் குறையத் தொடங்கிவிடும்.

அத்துடன், காணி விடுவிப்பு, முகாம்கள் அகற்றம், பாதுகாப்பு வலயங்கள் நீக்கம் போன்ற நகர்வுகள் இடம்பெற்றாலும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், பொறுப்புக்கூறல் போன்ற விடயங்களில் அரசாங்கம் நம்பகரமான செயற்படவில்லை. எனவே, இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (அ-ம-44)

## நகராட்சி மன்றம், சாவகச்சேரி
## சாவகச்சேரி நகரசபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம்
## ஒப்பந்த அடிப்படையிலானது

சாவகச்சேரி நகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காகவும் 15.09.2025ஆம் திகதி முதல் நியமிக்கப்படும் வகையில் சாவகச்சேரி நகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இந்நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் நகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச்சேவை சபையினால் நீடிக்கப்படலாம். நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும், சபைக்கு எதிராக
2. தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும், தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் நகர சபையின் சார்பில் நீதி மன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
3. நகரசபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.
4. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்துமூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒருபகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.
5. வாரத்தில் குறைந்தது 2 நாட்கள் பகுதி நேரமளவில் சட்ட ஆலோசனையின் பொருட்டு அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர்நீதி மன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 60 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.
4. தொழில் வரி செலுத்துபவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் பொருத்தமான சட்ட ஆலோசகர் தெரிவின் இறுதித் தீர்மானம் சபைத்தீர்மானத்திற்கமைவாக மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் தாங்கள் உள்ளூராட்சி மன்றத்திற்கு வழங்கும் சேவைகள் தொடர்பாக அறவிடப்படும் கட்டணம் தொடர்பான விபரங்கள் என்பவற்றினை நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் "தவிசாளர், நகரசபை, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதி அன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 07.09.2025

தவிசாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

(CR 45933) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவின் திருமஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-41-66)

## கல்லோடைகுமரனுக்கு பூங்காவனம்...

அழகான மயிலேறும் குமரன் சந்நிதிக் கந்தன்...!
அவன் அருளாட்சி
புரிகின்றான் ஆற்றங்கரை அமர்ந்து...!!
அழியாத அன்னமலை அவன் கோவில்...!!!
அடியார் மூவேளை பசியாறி...!
மனம் மகிழும் அவன் வாசல் அரவோடு
விளையாடும் வேலனுக்கு...!!
மலர்கொண்டு ஊஞ்சல் கட்டி மகிழ்வோடு அவன்
ஆடும் பூங்காவனம்...!!!

**க. கதிர்சன்**
சந்நிதி கோவிலடி,
தொண்டைமானாறு.

## நாய் மீது கொடூரம்; இளைஞருக்கு மறியல்

நானுஓயாவில் நாயைக் கொடூரமாகத் தாக்கி, நீரோடைக்குள் வீசிய 17 வயது இளைஞர் ஒருவர் செப்ரெம்பர் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாய் தனது பூனைக்குட்டியைக் கடித்துக் காயப்படுத்தியதால், குறித்த இளைஞர் இவ்வாறு நடந்துகொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சமூக ஊடகங்களில் வெளியான காணொலியில், அந்த இளைஞன் ஒரு கம்பியால் நாயைத் தாக்கி, தரையில் இழுத்து, கொத்மலை நீர்த்தேக்கத்துக்குள் பாயும் நீரோடைக்குள் வீசுவது தெரியவந்துள்ளது.

எனினும், காயமடைந்த நாய் எப்படியோ நீந்தி தனது வீட்டுக்குத் திரும்பியதாகக் கூறப்படு கிறது. இந்த தாக்குதல் குறித்த காணொளியை சமூக வலைத்தளங்களில் கண்ட நாயின் உரிமையாளர், நானுஓயா பொலிஸில் முறைப்பாடு செய்த நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## பூவரச மரத்தோனுக்கு பூங்காவனம்...




வள்ளிக் கொடி முளைக்கும் தருவாயில் கொடி ஏறும்
எங்கள் வள்ளல் நாயகனே...!
ஆற்றங்கரைதனில் அமர்ந்து அடியவர்களின் அல்லல்
தீர்க்கும் சந்நிதி அரசே...!!
மயிலோன் மணியோசை கேட்கையிலே மண்ணும்
மனமும் மகிந்திடுமே...!!!
அப்பனுக்கு அப்பனான கல்லோடைக் குமரனே...!
பக்தர்கள் புடை சூழ ஐந்து தலை நாகம் புடைசூழ
வண்ணமயிலில் அமர்ந்து உனை நாடிவரும் அடியவர்
குறை தீர்க்க வாராயோ...!!
எம் அப்பனே சந்நிதியானே...!!!

**த. பிருந்தன்.**
சந்நிதி கோவிலடி,
தொண்டைமானாறு.


Best Wishes

# பாராட்டி வாழ்த்துகிறோம்



SLPS-2 இலிருந்து SLEAS-3
இற்கு பதவி உயர்வு பெற்றுச்
செல்லும் எங்கள் அதிபர்
**திரு நாகேஸ்வரன்
பிரியந்தன்**

பாடசாலை முகாமைத்துவத்தை
பண்புடனே பலப்படுத்திய
பகலவனாம் எங்கள் அதிபர் பிரியந்தன்
பல்துறை விற்பன்னராய்
பள்ளியின் உயர்விற்காய் பகலிரவாய் பணியாற்றி
பள்ளியின் புகழைப் பாரெங்கும்
பறைசாற்றிய நீங்கள்
பதவியில் மேன் மேலும் உயர்வு பெற்றுப்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்
ஆசிரியர் கழகம்,
யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்து மாணவரின் 'மாறும் நிழல்' திரைப்படம் வெளியீடு

*யாழ்ப்பாணம், செப்.1*

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களின் பங்களிப்பில் முழுமையாகத் தயாரித்து இயக்கப்பட்ட திரைப்படமான 'மாறும் நிழல்' இன்று திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது.*

*யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் மு.ப. 11 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ச)*




## யாழ்ப்பாணத்துக்கு...

ஜனாதிபதி அநுரகுமார ஆட்சிப் பொறுப்பேற்று எதிர்வரும் 23ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இதை முன்னிட்டு அவர் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார். இதன்போதே, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதுடன், முக்கியமான சந்திப்புகளிலும் ஈடுபடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்று காலை 8.30 மணியளவில் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகளை ஜனாதிபதி ஆரம்பித்துவைக்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து காலை 9.30 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் புதிய அலுவலகத்தைக் திறந்து வைக்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பொதுநூலகத்தில் இடம்பெறும் நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளார்.

பிற்பகல் 1.30 மணியளவில் மண்டைதீவுப் பகுதியில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள சர்வதேசத் துடுப்பாட்ட மைதானத்தின் பணிகளையும் ஜனாதிபதி அநுர ஆரம்பித்துவைக்கவுள்ளதுடன், செம்மணிப் புதைகுழியையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

## விகாரைகளுக்குக்...

களுக்கு மேல்தான் விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்காக யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரவிகரன் எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனவழிப்பு விவகாரம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், வடக்கு - கிழக்கில் உள்ள மனிதப் புதைகுழிகள் உள்ளிட்ட விடயங்களுக்கு நாங்கள் நீதியான விசாரணைகளைக் கோரி வருகின்றோம்.

கடந்த காலத்தில் தமிழர்கள் மீது இனவழிப்புச் செயற்பாடுகள் இடம்பெற்றன என்பதற்கு தமிழர் தாயகத்தில் இனங்காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகளும், மனிதப் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படுகின்ற என்புத் தொகுதி களுமே சாட்சியாக இருக்கின்றன. இதனை யாருமே மறுக்கமுடியாது. கொலைசெய்தவனிடமே நீதியைக் கோருகின்ற உள்ளக நீதிவிசாரணைப் பொறிமுறையில் எமக்கு கடுகளவும் நம்பிக்கை கிடையாது. ஆகவேதான் தமிழ் இனவழிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், மனிதப் புதைகுழிகள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம்.

முல்லைத்தீவில் வட்டுவாகல் மற்றும் கேப்பாப்புலவு பகுதிகளில் இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் அகற்றப்பட்டு விகாரைகளின் கீழ்ப்பகுதிகள் ஆய்வு செய்யப்பட வேண்டும். அல்லது நவீன கருவிகளின் உதவியுடன் ஸ்கான் செய்யப்படவேண்டும். ஏனெனில், கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட போரின்போது சரணடைந்த போராளிகள் மற்றும் மக்களை இராணுவம் கைதுசெய்துள்ளது. அதன்பின்னர் அவ்வாறு இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்கள் வட்டுவாகல் சப்தகன்னியர் ஆலயத்துக்கு அருகே கடற்கரை நோக்கி போகும் பாதையினூடாக பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அதேபோல் சரணடைந்த பலர் கேப்பாப்பிலவு நோக்கியும் இராணுவத்தால் பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவ்வாறு இராணுவத்தால் பேருந்துகள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் திரும்ப அழைத்து வரப்படவில்லை. எனவே, விகாரைகளுக்குக்கீழ் மனிதப் புதைகுழிகள் உள்ளனவா என்று நாங்கள் வலுவாகச் சந்தேகிக்கின்றோம் - என்றார். (அ-ம-246)

## பல்வேறு...

என்று சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக ஆய்வுப் பணிகள் இனிவரும் நாள்கள் இடம்பெறலாம் என்றும் கருதப்படுகின்றது. (அ-ம-26)

## மின்வேலியில்...

சிவகுமார் (வயது-64) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தெல்லிப்பழையில் தோட்டம் செய்து வரும் அவர், பன்றிகளைக் கட்டுப்படுத்துவதற்காக தனது தோட்டத்தில் மின்சார வேலியைப் பொருத்தியுள்ளார். நேற்று முன்தினம் காலை தோட்டப் பணிகள் நிறைவடைந்தபோது மின்வேலிக்கான மின்னிணைப்பை நிறுத்தாமல் சென்றுள்ளார். பின்னர், நேற்றுமுன்தினம் மாலை தோட்டத்துக்குத் திரும்பிய போது, மின்வேலியில் தவறுதலாகச் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## ஜெனிவாவை...

கூட்டத்தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக எதிர்வரும் 6ஆம் திகதி அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழுவினர் இலங்கையில் இருந்து புறப்படவுள்ளனர். இதற்கு முன்னதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களை அவர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என அறியமுடிகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவைக் கோரும் வகையிலேயே அவர் நட்பு நாடுகளின் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இதன்போது உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நகர்வுகள் தொடர்பில் அவர் விளக்கமளிக்கவுள்ளார் என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்காக அங்கத்துவ நாடுகளின் ஒத்துழைப்பையும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கோரவுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## குவியல்...

சிதிலங்களில் பல உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றன என்றும் கூறப்பட்டுள்ளது. (அ-ம-26)

## மதுவரி...

களால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

மாதகல் பகுதியில் ஹெரோய்னுடன் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்வதற்கு மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மூவர் முயற்சித்துள்ளனர். பின்னர் அவரைக் கைது செய்யாமல் விடுவதற்காக குறித்த அதிகாரிகள் மூவரும் 30 லட்சம் ரூபா லஞ்சம் கோரியுள்ளனர். போதைப் பொருளை வைத்திருந்தவர் 20 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக வழங்குவதாக ஒப்புக்கொண்டுள்ளார். இதையடுத்து அவர்கள் சந்தேகநபரை விட்டுவிட்டு, இலஞ்சப் பணத்தைச் சித்தன்கேணிப் பகுதியில் அமைந்துள்ள மதுவரித் திணைக்கள அலுவலகத்துக்குக் கொண்டுவந்து தருமாறு கூறிவிட்டுச் சென்றுள்ளனர்.

போதைப்பொருளை வைத்திருந்ததாகக் கூறப்படும் தரப்பினரால் இந்த விடயம் தொடர்பில் காங்கேசன்துறைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து, முறைப்பாடு வழங்கிய தரப்பினர் இலஞ்சம் கொடுப்பதுபோல் பாசாங்கு செய்தவாறு அவர்கள் மதுவரித் திணைக்கள அலுவலகத்துக்குச் சென்றபோது, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட அதிகாரிகளிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26-66)

## அடுத்த...

னர். இது, இந்த ஆண்டின் கடைசி முழுச் சந்திர கிரகணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முழு சந்திர கிரகணம் 82 நிமிடங்கள் நிகழும் என கணிக்கப்பட்டுள்ளதுடன், நிலவு அடர் சிவப்பு நிறத்தில் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 77 வீதமானவர்களுக்கு இந்த சந்திரகிரகணத்தைக் காண்பதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## 12 என்புத்...

அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளில் 10 என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 209 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 191 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நேற்றைய அகழ்வுப் பணிகள் நண்பகல் ஒரு மணியுடன் முடிவுக்கு வந்திருந்தன. எனினும் குறுகிய நேரத்துக்குள் 12 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பெற்றோல்...

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது மாதாந்த விலை திருத்தத்தின் ஒரு பகுதியாக, நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலைக் குறைப்பை அறிவித்துள்ளது.

இதன்படி ஒக்ரேன் 92 பெற்றோல் லீற்றருக்கு 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி புதிய விலையாக 299 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரேன் 92 பெற்றோலின் விலை மாற்றமின்றி 341 ரூபாவாகத் தொடர்ந்து நீடிக்கும்.

டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 283 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்று 12 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 313 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விலை மாற்றப்படவில்லை. இதன்படி ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 185 ரூபாவாகத் தொடர்ந்து நீடிக்கும். (அ-ம-சி)

## இந்திய...

வழக்கில் 7 படகுகளை மீண்டும் இந்திய மீனவர்களுக்கு வழங்கலாம் என்று நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது. அத்துடன் 33 படகுகளை அரசுடைமையாக்கும் அறிவிப்பும் விடுக்கப்பட்டிருந்தது. அந்தப் படகுகளையே துண்டு துண்டாக உடைத்து அகற்றும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

எஞ்சிய படகுகள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.1

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு நடத்தும் விற்பனைக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்குப் பிரதேச செயலக முன்றலில் நடைபெறவுள்ளது. (ச)

# போதைப்பொருள் விழிப்புணர்வு ஆனைவிழுந்தானில் பேரணி



கிளிநொச்சி, செப். 1

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி 'ஹேப்பி பேமிலிஸ்' சிறுவர் அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

இதில் அரச அதிகாரிகள், பொலிஸார், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது பேரணியில் ஈடுபட்டவர்களால் போதைப்பொருள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விழிப்புணர்வுத் தெருவழி அபிநய நிகழ்வும் நிகழ்த்தப்பட்டதுடன் விழிப்புணர்வுக் கருத்துகளும் வழங்கப்பட்டன. (ச-113)



## உயிர்காப்பு கண்காணிப்புக் கோபுரம் கசூரினா கடற்கரையில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், செப். 1

கசூரினாக் கடற்கரைக்கு வருகைதரும் அனைவரினதும் பாதுகாப்பை உறுதி செய்ய, காரைநகர்ப் பிரதேசசபையினால் புதிதாக அமைக்கப்பட்ட உயிர்காப்புக் கண்காணிப்புக் கோபுரம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இந்தக் கோபுரம் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் ஒரு முக்கியமான முயற்சியாக அமைகிறது. (ச-இ)

அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையம், அருணோதயா விளையாட்டுக் கழகம் மற்றும் அருணோதயா மகளிர் கழகம் ஆகியன இணைந்து நடத்திய பெண்களுக்கான பாரம்பரிய கிளித்தட்டு விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ச-9)



## ஒன்லைன் மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கு இணுவிலில் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, செப். 1

2024/2025ஆம் கல்வி ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான விண்ணப்பங்களைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனமான இணுவில் பொதுநூலகத் தகவல் தொழில்நுட்ப மையத்தில் இன்று திங்கட்கிழமை முதல் தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பெற்று ஒன்லைன்மூலம் விண்ணப்பிக்கமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இலக்கம், உயர்தரப் பரீட்சைச் சுட்டெண், இலங்கை வங்கியில் பணம் செலுத்திய துண்டு அல்லது ஒன்லைன்மூலம் பணம் செலுத்தக்கூடிய வசதிகள் இருப்பின் பணம் செலுத்தும் அட்டை (ATM Card) வசதி, முதல் விண்ணப்பப் படிவம் நிரப்பப் பயன்படுத்தப்பட்ட மின்னஞ்சல் முகவரியுடன் முதற்படிவத்தில் உள்நுழையக் கொடுக்கப்பட்ட கடவுச்சொல் (password), முதல் விண்ணப்பப் படிவம் நிரப்பப் பயன்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கத்துடன் கூடிய கைத்தொலைபேசி ஆகியவற்றைத் தவறாது கொண்டுவரவும். மேலதிகத் தகவல்களுக்கு 0779775650, 07707 37919, 0774431851, 0212241930 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-66)

## யாழ். கடவுச்சீட்டு அலுவலக இறுதிப்பணிகள் மும்முரம்

யாழ்ப்பாணம், செப். 1

யாழ். மாவட்டச் செயலக வளாகத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்தை இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க திறந்துவைக்கவுள்ள நிலையில் அலுவலகத்தின் உள்கட்டமைப்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன.

இந்தப் பணிகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் மற்றும் யாழ். மாநகரசபை உறுப்பினர் சு. கபிலன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (ச-20)



## தவறான முடிவெடுத்து மாணவி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தவறான முடிவெடுத்து மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவியின் தந்தை நீண்ட காலமாக மனைவியைப் பிரிந்திருந்த நிலையில் மாணவி தாயாருடனே வசித்து வந்தார். இந்தநிலையில் கடந்த 25ஆம் திகதி தவறான முடிவெடுத்து தனக்குத் தானே மண்ணெண்ணெயை ஊற்றி தீமூட்டியுள்ளார். படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்தார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை அச்சுவேலிப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ-ம-26)

September Intake
MBA
Fast-track Mode
✔ UGC, WES Approved
Call for more details
DTPE Campus-077 543 8086
(CS 3924) A

## மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப். 1

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலிருந்து சுற்றாடல்சார் செயற்பாட்டில் ஜனாதிபதி விருதுபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வடமத்திய மாகாண பிரதிப் பணிப்பாளர் து. சுபோகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-16)

விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

அல்லது

- தென்மராட்சி 50,000,
- யாழ்மாவட்டம் 55,000
- வடமராட்சி 58,000

விநியோகிக்கப்படும்.

தொடர்பு:- 076 324 9977



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 01.09. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.